கார்த்திகை மாதம் பூத்திடும் போதில்
கார்த்திகை பூக்களும் பூத்திடும் ..கண்ணில்
நீர்த்துளி கோர்க்கும் நிலமது வேர்க்கும்
நெஞ்சில் நெருப்பினை மூ..ட்டிடும் ...

இசை

கண்ணுக்குள்ளே வைத்துக் காத்திடும் வீரரை
மண்ணுக்குள்ளே விதைத்தோம்
அந்த புண்ணியர் நெஞ்சிலே பூத்ததோர் கனவினை
எண்ணத்திலே வளர்த்தோம்
கண்ணுக்குள்ளே வைத்துக் காத்திடும் வீரரை
மண்ணுக்குள்ளே விதைத்தோம்
அந்த புண்ணியர் நெஞ்சிலே பூத்ததோர் கனவினை
எண்ணத்திலே வளர்த்தோம்
கல்லறை வாழ்ந்திடும் வல்லவரே உம்மை கைதொழ வந்துள்ளோம்
கண்திறப்பீர்
மெல்லிய புன்னகை மேகங்களே உங்கள் சொந்தங்கள் வந்துள்ளோம்
வாய்திறப்பீர்
கண்ணுக்குள்ளே வைத்துக் காத்திடும் வீரரை மண்ணுக்குள்ளே
விதைத்தோம்
அந்த புண்ணியர் நெஞ்சிலே பூத்ததோர் கனவினை எண்ணத்திலே
வளர்த்தோம்

இசை

ஆயிரம் ஆயிரம் பேர்களை விதைத்தோம் கல்லறை வரிசைகள் நீள்கிறதே -
அந்த
வரிசையில் சுடர்கள் ஏற்றிடும் பொழுதில் நெஞ்சினில் நெருப்பது மூள்கிறதே
மானத்தின் திருநாள் கார்த்திகையே மா..வீரத்தின் பெருநாள் கார்த்திகையே
மானத்தின் திருநாள் கார்த்திகையே எங்கள் மாதவனானதும் கார்த்திகையே
கார்த்திகை மாதம் கறுப்பு இந்த கார்த்திகை மாதம் நெருப்பு
கார்த்திகை மாதம் கறுப்பு இந்த கார்த்திகை மாதம் நெருப்பு
கண்ணுக்குள்ளே வைத்துக் காத்திடும் வீரரை
மண்ணுக்குள்ளே விதைத்தோம்
அந்த புண்ணியர் நெஞ்சிலே பூத்ததோர் கனவினை
எண்ணத்திலே வளர்த்தோம்
கண்ணுக்குள்ளே வைத்துக் காத்திடும் வீரரை
மண்ணுக்குள்ளே விதைத்தோம்
அந்த புண்ணியர் நெஞ்சிலே பூத்ததோர் கனவினை
எண்ணத்திலே வளர்த்தோம்

இசை

வீசிடும் காற்றதும் தூவிய தீயதும் உங்களின் கல்லறையில் பணிகிறதே எங்கள்
தாயகம் முழுவதும் தாங்கிய தோள்களை பார்த்திட விழிகளும் ஏங்கிறதே
விதைப்பதும் முளைப்பதும் கார்த்திகையில்
உங்கள் விழிகளும் மலர்வதும் கார்த்திகையில்
நெருப்புகள் சிரிப்பதும் கார்த்திகையில்
எங்கள் நெஞ்சுகள் சிலிர்ப்பதும் கார்த்திகையில்
கார்த்திகை மாதம் கறுப்பு இந்த கார்த்திகை மாதம் நெருப்பு
கார்த்திகை மாதம் கறுப்பு இந்த கார்த்திகை மாதம் நெருப்பு
கண்ணுக்குள்ளே வைத்துக் காத்திடும் வீரரை
மண்ணுக்குள்ளே விதைத்தோம்
அந்த புண்ணியர் நெஞ்சிலே பூத்ததோர் கனவினை
எண்ணத்திலே வளர்த்தோம்
கல்லறை வாழ்ந்திடும் வல்லவரே உம்மை கைதொழ வந்துள்ளோம் கண் திறப்பீர்
மெல்லிய புன்னகை மேகங்களே உங்கள் சொந்தங்கள் வந்துள்ளோம் வாய்திறப்பீர்
கண்ணுக்குள்ளே வைத்துக் காத்திடும் வீரரை
மண்ணுக்குள்ளே விதைத்தோம்
அந்த புண்ணியர் நெஞ்சிலே பூத்ததோர் கனவினை
எண்ணத்திலே வளர்த்தோம்
கண்ணுக்குள்ளே வைத்துக் காத்திடும் வீரரை
மண்ணுக்குள்ளே விதைத்தோம்
அந்த புண்ணியர் நெஞ்சிலே பூத்ததோர் கனவினை
எண்ணத்திலே வளர்த்தோம்